Permission to open Toys unit at Kodambakkam

*** 388 Q.—Thiru N. DENNIS:** Will the Hon. the Minister for Local Administration be pleased to state —

(*a*) whether the resolution of the Licence Appeals Committee of the Madras Corporation approving the proposals to the manufacture of toys near the Kodambakkam Bridge at Madras has been cancelled by the State Government in October 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் 49 என கதவிலக்கம் உள்ள இடத்தில் 3 பரித்திறன் உள்ள மின்சார மோட்டார் கொண்டு பொம்மைகள் செய்யும் தொழிற்சாலை நிறுவ உரிமம் வழங்குமாறு சென்னை மாநகராட்சிப் பொறுப்பதிகாரிக்கு ஒருவர் விண்ணப்பித்தார். அந்த இடம், நுங்கம்பாக்கம் மேற்குப் பகுதி 11 ஒப்பளிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டத்தின்கீழ் குடியிருப்புக் கட்டும் காரியத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதால், உரிமம் வழங்க மாநகராட்சி பொறுப்பதிகாரி மறுத்துவிட்டார். உரிமம் கேட்டு விண்ணப்பித்தவர் மேல்முறையீடு செய்து கொண்டதன்மேல், மேல்முறையீட்டுக் குழு உரிமம் வழங்க முடிவு செய்தது. உரிம மேல்முறையீட்டுக் குழு உரிமத்திற்கு ஒப்பளிப்பு வழங்கிச் செய்த தீர்மானம் நகரமைப்புத் திட்ட சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பிற்கு முரணாக இருந்ததால், அது 1973 ஆகஸ்ட் திங்களில் அரசினால் ரத்து செய்யப்பட்டது.

Thiru K. M. SUBRAMANIAM: Are the Government aware that there are many instances wherein licences have been given by the Licence Appeals Committee in non-shopping areas and non-licensing areas and Government have objected issuing of various such licences? Will the Government think of taking action against such illegal licences issued?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அவர்கள் மேல் முறையீடு செய்துகொள்ளுவதற்கும் உரிமம் கேட்டு விண்ணப்பித்துக்கொள்வதற்கும் அவர்களுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதிலே ஏதாவது முறைகேடாக வழங்கப்பட்டால் அதைப்பற்றி அரசு பரிசீலனைசெய்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 389-ம், 390-ம் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.

வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. எ. சுப்பிரமணியம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், போக்குவரத்துத்துறை அமைச்சர் இங்கே வாவில்லை. போக்குவரத்துத் துறை அமைச்சர் அமைச்சரவையிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டார் என்ற தகவல் வருகிறதே, அதைப்பற்றிய தகவலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள்.

(2) கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம் முலகுமூடு என்னும் ஊரிலுள்ள ஆல்வின் நடுநிலைப்பள்ளியை மூட இருப்பதும் அப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியமும் குறித்து

THIRU J. JAMES : Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the proposed closure of Allwin Middle School, Mulagumoodu, Thuckalay Education district, Kanyakumari district and the necessity to protect the teachers and students of that school.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கன்னியாகுமரி மாவட்டம், மூலகுமூடு என்னும் ஊரிலுள்ள ஆல்வின் நடுநிலைப்பள்ளிக்கு 1974 ஆம் ஆண்டு மே மாதம் முடிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பள்ளியின் நிர்வாகி 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசுக்குக் கொடுத்துள்ள மனுவொன்றில், இப்பள்ளிக்கு அருகாமையிலுள்ள நான்கு ஆரம்பப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக மேம்பாடு செய்து கல்வி அலுவலர்கள் ஆணையிட்டதால், தம் பள்ளியில் 6, 7 மற்றும் 8 வகுப்புகளில் மாணவர் வருகை குறைந்துவிட்டதென்றும், அதன் காரணமாகத் தம் பள்ளியைத் தொடர்ந்து நடத்தமுடியாமல் போகுமென்று தெரிகிற தென்றும், ஆகவே அடுத்த கல்வி ஆண்டான 1974–75 முதல் தம் பள்ளிக்கான அங்கீகாரத்தை நீடிப்பதற்குத் தாம் விண்ணப்பம் செய்யப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். அப்பள்ளியை அடுத்தக் கல்வி ஆண்டு முதல் மூடிவிடவேண்டிய சூழ்நிலை எற்படின் பள்ளியில் வேலை பார்த்துவரும் ஆசிரியர்களுக்குத் தக்க மாற்று வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமென அரசைக் கேட்டுள்ளார்.

அரசு இம்மனுவின்மீது பள்ளிக் கல்வி இயக்குநரின் விரிவான அறிக்கையைக் கேட்டுள்ளது. இப்பள்ளியினை அடுத்த ஆண்டு முதல் தொடர்ந்து நடத்த வாய்ப்பு உண்டா எனவும், இல்லையெனில், இப்பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களை வேறு பள்ளிகளில் பணியிலெடுத்துக்கொள்ளுவதற்கும், பிள்ளைகளையும் மற்ற பள்ளிகளில் சேர்த்துக்கொள்வதற்குமான சாத்தியக்